# *எதிர் காலத்தை நோக்கி…*

அமெரிக்காவில் பெரிய லொரி (Truck) ஒன்று 200 கி.மீ. (200 km) தொலைவு தூரத்தை ஓட்டுநர் இல்லாமல், வெறும் GPS உதவியுடன் கடந்து சென்று Colorado Springs என்ற நகருக்கு சரக்கைக் கொண்டு சேர்த்திருக்கின்றது. சிங்கப்பூர் நகரில் ஓட்டுநர் இல்லாத ஆறு டாக்ஸிகள் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன. இவை தங்களுக்கு மிகவும் உதவியாக இருப்பதாக சிங்கப்பூரில் நடத்தப் பட்ட ஆய்வில் மக்கள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில், அமெரிக்காவின் விமானத் தொழிற்சாலையான Boeing, விரைவில் விமானி இல்லாத சரக்கு விமானத்தை வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கப் போவதாகக் கூறியிருக்கின்றது. ஏற்கனவே மூன்று டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிக் கொண்டு விமானம் ஒன்று ஆளில்லாமல் பறந்து சென்று, செல்ல வேண்டிய இடம் போய்ச் சேர்ந்திருக்கின்றது. அவ்வாறே ஆளில்லாத சரக்குக் கப்பல் ஒன்றை அமெரிக்காவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு அனுப்ப முயற்சிகள் மேற் கொள்ளப் படுகின்றன.

இதற்கிடையில், இயந்திர மனிதனை வைத்துப் போர் நடக்கும் இடங்களில் சண்டை போடச் செய்யலாமா, கடுமையான யுத்தத்தின் ஊடே போர் வாகனங்களை (armoured tanks etc.) இயந்திர மனிதனை வைத்து ஓட்டிப் பார்க்கலாமா, என்றெல்லாம் திட்டங்கள் தீட்டப் படுகின்றன.

இயந்திர மனிதன் களைப்படைய மாட்டான், அவன் உடல் சுகமில்லை என்று படுக்க மாட்டான், அவனுக்கு மருந்துகள் தேவையில்லை, ஓய்வு தேவையில்லை, சம்பளம் கேட்க மாட்டான், எதிர்த்துப் பேச மாட்டான், சொன்னதைச் செய்வான், கம்ப்யூட்டர் போல் கீழ்ப்படிவான்.

அவன் உடைந்து போனால் அவன் வெறும் பழுதாகிய இயந்திரம் தான். உடனே அவனைச் சரி செய்து விடலாம், அல்லது தூக்கி எறிந்து விடலாம். யாரும் அதைப் பற்றிக் கவலைப் படப் போவதில்லை. உயிருள்ள மனிதனை விட அவனைப் பயன் படுத்துவதால் செலவும் மிச்சம், மன உளைச்சலும் மிச்சம் என்றும் கூறப் படுகின்றது. இயந்திர மனிதன் வருங்காலத்தில் எமக்குப் பதிலாகத் தொழிற்சாலையில் நின்று தொழில் புரிவான் என்று பேசிக் கொள்கின்றார்கள்.

இதில் நாங்கள் உன்னிப்பாக உற்று நோக்க வேண்டிய விடயம் ஒன்று மறைந்திருக்கின்றது: எல்லாவற்றையும் இயந்திரமே செய்தால், மனிதனுக்கு யார் வேலை கொடுப்பது? மனிதை யார் பார்ப்பது? குடும்பங்களை யார் கவனிப்பது? நாட்டின் செல்வங்களை மக்களுக்குப் பகிர்ந்து கொள்ள இது வரை தனி மனிதன் செய்யும் வேலை தான் சிறந்த வாய்க்காலாக எல்லா நாடுகளிலும் பயன் படுத்தப் பட்டது. இனி வேலைகளை இயந்திரம் செய்தால், நாட்டின் வருமானத்தை எல்லோருக்கும் பகிர்ந்தளிப்பது எப்படி? என்னென்ன புதிய பகிர்வு முறைகளை மனிதன் கண்டு பிடிக்க வேண்டி இருக்கும்? அதற்கான ஒரு வழியை எமக்குக் காட்டுவது யார்? எனவே மீண்டும் இறை வார்த்தைகளை நோக்கியே நாங்கள் திரும்ப வேண்டியதாக இருக்கின்றது.

கட்டளைகளுக்குள் பெரிய கட்டளை எது என்று சட்ட வல்லுநர் கேட்ட போது இயேசு கூறிய பதில் இதுவே: "*இஸ்ராயேலே கேள்! உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் கடவுளாகிய ஆண்டவரை நீ முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும் நேசிப்பாயாக. இரண்டாவதாக, நீ உன்னை நேசிப்பது போல், உன் அயலானையும் நேசிப்பாயாக. இறைச் சட்டங்கள் அனைத்திற்கும், இறை வாக்குகள் அனைத்திற்கும் இவையே அடித்தளம்.*"

எதிர் காலத்திற்கான வாழ்வின் வாய்க்கால்களை அர்த்தம் நிறைந்த மனத்தோடும், மிகுந்த மகிழ்ச்சியோடும் அமைத்து நடை பயில இறை அருள் எமக்கு மிகவே கிட்டுவதாக.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**